# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க,
## தாவர, விலங்கினப் பாதுகாப்பு
## (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, மாச்சு மாதம் 04 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2022 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க,**
**தாவர, விலங்கினப் பாதுகாப்பு**
**(திருத்தச்) சட்டம்**

[2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 13/2017

**(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

469 ஆம் அத்தியாயத்துக் கான விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது:-

"இலங்கையிலுள்ள தாவரங்களையும் விலங்கினங்களையும் மற்றும் அவற்றின் வாழிடங்களையும் பாதுகாப்பதற்காகவும் பேணுவதற்காகவும்; அத்தகைய தாவரங்களினதும் விலங்கினங்களினதும் மற்றும் அவற்றின் வாழிடங்களினதும் வர்த்தகஞ்சார் அத்துடன் வேறு துர்ப்பிரயோகத்தைத் தடுப்பதற்காகவும்; இலங்கையின் உயிரிய வேற்றுமையைப் பேணுவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; காட்டுத் தாவர, விலங்கினங்களின் ஆபத்துக்குட்பட்ட இனங்களிலான சர்வதேச வியாபாரத்தின்மீதான சமவாயத்துக்கு (CITES) பயன்கொடுப்பதற்கு அத்தகைய வழிமுறைகளை எடுப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு கட்டளைச்சட்டம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஊஅ) அமைச்சரவையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துக்கமைய, காட்டுத் தாவர, விலங்கினங்களின் ஆபத்துக்குட்பட்ட இனங்களிலான சர்வதேச வியாபாரத்தின்மீதான சமவாயத்தின் (CITES) ஏற்பாடுகளை வலுவுறுத்துவதற்கு அவசியமான எல்லாக் கருமங்களும்;

(ஊஆ) காட்டுத் தாவர, விலங்கினங்களின் ஆபத்துக்குட்பட்ட இனங்களிலான சர்வதேச வியாபாரத்தின்மீதான சமவாயத்தின் கீழ் (CITES) வழங்கப்படவுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின்மீது நிமித்துக் குழுக்களின் விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக அவற்றை நியமித்தல்;".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*